இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 118 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 22 – திங்கள்கிழமை 08 டிசம்பர் 2025 – கோவை ★ ★ 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 118: Thiruvalluvar Year - 2056 - Karthigai 22 - Monday 08 December 2025 - Kovai ★ ★ 12+12 Pages ₹ 5.00


### புரட்டுகளைப் பொசுக்கிய புரட்சியாளர் - அண்ணல்

## அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்!

### நினைவு நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.8-**

**அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவுநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “அண்ணல் அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

புரட்டுகளைப் பொசுக்கிய புரட்சியாளர் அம்பேத்கர் நினைவுநாள்!

எல்லாவிதத்திலும் தன்னை அடக்கி ஒடுக்கும் ஓர் அமைப்புக்குள் இருந்து, கல்வி எனும் ஆயுதத்தால் அனைத்தையும் தகர்த்தெறிந்து மேலெழுந்த அறிவுச் சூரியன்தான் அம்பேத்கர். அன்று அவரை அடக்க நினைத்த அதே ஆதிக்கக் கூட்டம் இன்று அவரைத் துதிப்பது போல நடிக்கிறதே, அதுதான் அவரது வெற்றி.

அவரது வாழ்வே ஒரு பாடம்! அவரது போராட்டங்களே சமத்துவச் சமூகத்தை நோக்கிய பயணத்தில் நமக்கு ஊக்கம்! அண்ணல் அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற, “முதலமைச்சரின் தாயுமானவர்” திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

### ‘டித்வா’ புயலால் பாதிக்கப்பட்டுள்ள

# இலங்கைவாழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

### கப்பலில் அனுப்பிடும் நிகழ்வை கொடியசைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச.8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2025) ‘டித்வா’ புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நெருக்கடியில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கை வாழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உதவிடும் வகையில் சென்னை துறைமுகத்திலிருந்து 650 மெட்ரிக்டன்னும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன்னும், என மொத்தம் 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்களை இலங்கை நாட்டிற்கு இந்திய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் மூலம் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்நிகழ்வில், தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களின் மாதிரி தொகுப்பினை இலங்கை துணைத் தூதர் டாக்டர்.கணேசநாதன் கீதீஸ்வரன் அவர்களிடம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2025) ‘டித்வா’ புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டு, நெருக்கடியில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கைவாழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உதவிடும் வகையில் சென்னை துறைமுகத்திலிருந்து 650 மெட்ரிக் டன்னும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன்னும், என மொத்தம் 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்களை இலங்கை நாட்டிற்கு இந்திய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் மூலம் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்நிகழ்வில், சென்னை துறைமுகத்தில், இலங்கை துணைத் தூதர் டாக்டர்.கணேசநாதன் கீதீஸ்வரன், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறைச் செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

‘டித்வா’ புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைவாழ் மக்களுக்கு உதவக்கூடிய வகையில், சென்னை துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன் சர்க்கரை, 300 மெட்ரிக் டன் பருப்பு, 25 மெட்ரிக் டன் பால் பவுடர், 25 மெட்ரிக் டன் கொண்ட 5000 வேட்டிகள், 5000 சேலைகள், 10,000 துண்டுகள், 10,000 போர்வைகள் மற்றும் 1000 தார்பாலீன்கள் ஆகிய நிவாரணப் பொருட்களையும் மற்றும் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 150 மெட்ரின் டன் சர்க்கரை, 150 மெட்ரிக் டன் பருப்பு உள்ளடக்கிய நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இப்பணிகள் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கைத்தறி துறை மற்றும் வேளாண்மை - உழவர் நலத்துறை ஆகிய துறைகள் மூலம் ஒருங்கிணைந்து சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், சென்னை துறை முகத்தில், இலங்கை துணைத் தூதர் டாக்டர். கணேசநாதன் கீதீஸ்வரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ் எம். செனாய், பொதுத்துறைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், சென்னை துறைமுகத்தின் தலைவர் விஸ்வநாதன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொதுத்துறை கூடுதல் செயலாளர் பால சுப்ரமணியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ. அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், கமோடர் அனில்குமார், கடற்படை ஸ்டேசன் கமாண்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரை மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது:

## வீர மங்கை வேலுநாச்சியார் பெயரில் மேம்பாலம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, டிச.7-

வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் திறப்பு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்: மதுரை மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது!**

**மதுரை சிவகங்கை மாவட்டங்களை இணைக்கும் மேலமடை சந்திப்பு சாலை மேம்பாலத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, நாளை (இன்று) நான் திறந்து வைக்கிறேன்.**

**இந்த முக்கிய மேம்பாலத்துக்கு, இம்மண்ணின் மக்களை ஒன்றுதிரட்டி ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடிய வீர மங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயரைச் சூட்டிப் பெருமையடைகிறோம்!**

**சீற்றமிகு சிவகங்கை அரசியின் புகழை இந்த மேம்பாலம் ஒவ்வொரு நாளும் நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழகம் முழுவதும்

## 126 கிராமங்களில் அறிவுசார் மையங்கள்!

*திருச்சி, டிச. 7 -*

*ஆதிதிராவிடர், பழங்குடியினத்தைச் சேர்ந்த கிராமப்புற மக்கள் கல்வியறிவு பெறவும், மாணவர்கள், விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையிலும் தமிழகம் முழுவதும் 126 கிராமங்களில் அறிவுசார் மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அரசாணையை தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வெளியிட்டுள்ளது.*

*கிராமப்புற ஆதிதிராவிட, பழங்குடியினருக்கு அரசின் நலத்திட்டங்களை அறிவித்தல், கல்வி மற்றும் இதர பயனுள்ள தகவல்களை வழங்குதல், விவசாயி கள், மாணவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளித்தல் என்ற அடிப்படையில் இந்த மையங்கள் செயல்படவுள்ளன. இதற்காக தமிழகத்தில் 126 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.*

*இந்த மையத்தில் விவசாயிகள் சுய உதவிக்குழுக்களுக்கான பயிற்சி மையம், கணினி அறை, நூலக அறை, நிர்வாக அலுவலகம், ஆலோசனை வழங்கும் அறை, கழிப்பறைகள், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் இடம்பெறவுள்ளன.*